வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 27.9.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

சுற்றுலா மனிதகுலத்தின் பிணைப்பை உருவாக்குகிறது என்றும் பொருளாதாரத்தை உயர்த்துவதில் பங்காற்றுகிறது என்றும் குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் கூறி உள்ளார்.

ஜம்மு-காஷ்மீரில் வரும் 1-ஆம் தேதி நடைபெற உள்ள 3-ஆவது மற்றும் இறுதி கட்ட சட்டப் பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி பங்கேற்கும், 114 ஆவது மன் கீ பாத் என்னும் மனதின் குரல் நிகழ்ச்சி வரும் 29 ஆம் தேதி, காலை 11 மணிக்கு, அகில இந்திய வானொலி மற்றும் தூர்தர்ஷனின் அனைத்து அலைவரிசைகளிலும் ஒலிபரப்பாக உள்ளது.

புதுச்சேரியில் சுற்றுலாப் பயணிகளின் வருகையால் கலாச்சார பரிமாற்றம் மற்றும் நட்புறவு ஏற்படுகிறது என்று முதலமைச்சர் திரு ரங்கசாமி குறிப்பிட்டுள்ளார்.

உலக சுற்றுலா தினம்

உலக சுற்றுலா தினம் இன்று கொண்டாடப்படுகிறது. சுற்றுலா மனிதகுலத்தின் பிணைப்பை உருவாக்குகிறது என்றும் பொருளாதாரத்தை உயர்த்துவதில் பங்காற்றுகிறது என்றும் குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் கூறி உள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற உலக சுற்றுலா தின நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், அமைதிக்கு சுற்றுலா பெருமளவில் பங்களிக்கிறது என்றும், உலக மக்கள் அனைவரும் அமைதியை விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டின் உலக சுற்றுலா தினத்தின் கருப்பொருளான **சுற்றுலா மற்றும் அமைதி** என்பது மிகவும் பொருத்தமானது என்றும் அவர் கூறினார். உலக பொருளாதார வளர்ச்சி, சமூக முன்னேற்றம் மற்றும் கலாச்சார பரிமாற்றம் ஆகியவற்றில் சுற்றுலாவின் ஆழமான தாக்கத்தைக் கொண்டாடும் நிகழ்வாக உலக சுற்றுலா தினம் கொண்டாடப்படுகிறது என்று கூறி அவர் உள்ளார். நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய சுற்றுலாத் துறை அமைச்சர் திரு கெஜேந்திர சிங் ஷெகாவத், சுற்றுலா என்பது பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் நாடுகளுக்கு இடையே, புரிந்துணர்வை உருவாக்கும் பாலமாக திகழ்கிறது என்றும் நாட்டின் ஒட்டுமொத்த சுற்றுலா வளர்ச்சிக்காக அர்ப்பணிக்கப்பட்ட திறன் சார்ந்த பட்டியலை சுற்றுலா அமைச்சகம் விரைவில் வெளியிடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.தொடர்ந்து பேசிய சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு ஒரு நாட்டின் விருந்தோம்பலின் பிரதிபலிப்பாக விமான போக்குவரத்து சூழல் செயல்படுகிறது என்று கூறினார். சுற்றுலா அமைச்சகத்தின் பல்வேறு நிகழ்ச்சிகளையும் குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் தொடக்கி வைத்தார். இதில் சுற்றுலா கிராமப் போட்டி, தொழில்துறை கூட்டாண்மை, மற்றும் சுற்றுலா குறித்த கையேடு வெளியீடும் அடங்கும். தமிழ்நாடு, கேரளா, உட்பட நாட்டின் பல்வேறு மாநிலங்களிலும் சுற்றுலா தினத்தை ஒட்டி சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

*நிர்மலா*

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் உஸ்பெகிஸ்தானுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். இன்று தாஷ்கண்டில் இந்தியா-உஸ்பெகிஸ்தான் நாடுகளுக்கு இடையேயான இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தத்தில் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் மற்றும் உஸ்பெகிஸ்தான் துணை பிரதமர் கோட்ஜயேவ்

ஜாம்ஷித் ஆகியோர் கையெழுத்திட்டனர். இரு நாடுகளின் முதலீட்டாளர்களுக்கு உரிய பாதுகாப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தமும் கையெழுத்தானது. பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும், முதலீட்டு சூழலை உருவாக்குவதற்கும், இருநாடுகளின் உறுதிப்பாட்டை இந்த ஒப்பந்தம் பிரதிபலிப்பதாக நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்த ஒப்பந்தம் இருதரப்பு முதலீடுகளை அதிகரிக்கவும், இருநாடுகளிலும் உள்ள வர்த்தகங்கள் மேம்படவும் வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சகம் கூறி உள்ளது.

6-ஜி

6-ஜி தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துவதில் இந்தியா உலகிற்கு முன்னோடியாக திகழும் என்று மத்திய தொலை தொடர்புத் துறை அமைச்சர் திரு ஜோதிராதித்யா சிந்தியா கூறி உள்ளா. சென்னை ஐஐடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாணவர்களிடையே உரையாற்றிய அவர் 5-ஜி அறிமுகமானபோது உலகத்தோடு இணைந்து இந்தியா பயணித்தது என்றும், தொழில் நுட்ப புரட்சியின் காரணமாக 6-ஜி தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துவதில் உலகிற்கே இந்தியா முன்னோடியாக திகழும் என்றும் பெருமிதம் தெரிவித்தார்.

10 ஆண்டுகளுக்கு முன்பு அகண்ட அலைவரிசை இணைப்புகள் இந்தியாவில் 6 கோடியாக இருந்தது என்றும் தற்போது 94 கோடி இணைப்புகள் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். மாணவர்கள் தங்களது கல்விக்கு பின்னர் வாழ்க்கையைத் தொடங்கும் போது அவர்கள் படித்த நிறுவனத்திற்கும் நாட்டுக்கும் பயன் உள்ள வகையில் பங்காற்ற வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். இந்தியாவை தொலை தொடர்பு உற்பத்தி மையமாக மாற்றுவதற்கான பணிகளை மத்திய அரசு தொடங்கி

உள்ளது என்று கூறிய அமைச்சர் அதற்கான கட்டமைப்புகளை உருவாக்கும் ஆயத்தப் பணிகள் தொடங்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

*ஜவுளித் துறை*

2030-ஆம் ஆண்டிற்குள் ஜவுளித் தொழில் 350 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புக்கு உயரும் என்று மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று அமைச்சகத்தின் 100 நாள் சாதனைகள் குறித்த செய்தியாளர்கள் கூட்டத்தில் உரையாற்றிய அவர் இத்துறையின் மூலம் 6 கோடி வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் கூறினார். பிரதமரின் மித்ரா திட்டம் குறித்து பேசிய மத்திய அமைச்சர் இத்திட்டத்தின் மூலம் 21 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் ஜவுளித் துறையில் அன்னிய முதலீட்டை ஈர்க்க இந்தியாவிற்கு பாரத் டெக்ஸ் மாநாடு மற்றும் கண்காட்சி உதவும் என்றும் தெரிவித்தார். நிகழ்ச்சியில் மத்திய இணை அமைச்சர் திரு பபித்ரா மார்கேரிட்டா, ஜவுளித் துறை செயலாளர் திருமதி ரச்சனா ஷா, மற்றும் மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

*ஜம்மு-காஷ்மீர்*

ஜம்மு-காஷ்மீரில் 3-ஆவது மற்றும் இறுதி கட்ட சட்டப் பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. வரும் ஒன்றாம் தேதி 40 தொகுதிகளுக்கான தேர்தல் நடைபெற உள்ள நிலையில் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளையும், 100 சதவிகித வாக்குப் பதிவை உறுதி செய்யும் வகையில் மக்களிடையே விழிப்புணர்வு பிரச்சாரங்களையும் தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது. பிஜேபியின் மூத்த தலைவரும் பிரதமருமான

திரு நரேந்திர மோடி நாளை ஜம்மு-வில் மவுலானா ஆசாத் மைதானத்தில் நடைபெறும் பேரணியில் கலந்து கொண்டு பொதுக் கூட்டத்தில் உரையாற்ற உள்ளார். காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி ராம்கர் மற்றும் சம்ப் ஆகிய பகுதிகளில் 2 பேரணிகளில் பங்கேற்று உரையாற்றினார். காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திருமதி பிரியங்கா காந்தியும் நாளை பேரணிகளில் கலந்து கொண்டு வாக்கு சேகரிக்க உள்ளார்.

*மன் கி பாத்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி பங்கேற்கும், 114 ஆவது மன் கீ பாத் என்னும் மனதின் குரல் நிகழ்ச்சி வரும் 29 ஆம் தேதி, ஞாயிற்றுகிழமை காலை 11 மணிக்கு, அகில இந்திய வானொலி மற்றும் தூர்தர்ஷனின் அனைத்து அலைவரிசைகளிலும் தகவல்- ஒலிபரப்பு அமைச்சகத்தின் யு-டியூப் சேனல்களிலும் நேரடியாக ஒளிபரப்பபடும். பிரதமரின் இந்தி உரையைத் தொடர்ந்து பிராந்திய மொழிகளிலும் மன் கி பார் நிகழ்ச்சி ஒலிபரப்பாக உள்ளது. 3-ஆவது முறையாக பிரதமராக பதவி ஏற்றப் பிறகு திரு நரேந்திர மோடி, பங்கேற்கும் 4-ஆவது மன் கி பாத் நிகழ்ச்சி இதுவாகும்.

*மத்திய அரசு*

மத்திய அரசின் அனைத்து துறைகளுக்குமான நாடாளுமன்ற நிலைக் குழுக்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. நிதி துறைக்கு பிஜேபியின் பர்த்ரூ ஹரி மாத்தாப் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. காங்கிரஸ் கட்சியின் திரு சசி தரூர் வெளியுறவுத் துறைக்கும், முன்னாள் மத்திய அமைச்சர் திரு ராதா மோகன் சிங், பாதுகாப்புத் துறை நிலைக் குழுவுக்கும் தலைமை பொறுப்பை வகிப்பார்கள். திமுக-வின் திரு திருச்சி சிவா தொழில் துறைக்கும், திருமதி கனிமொழி நுகர்வோர்

விவகாரங்கள் துறை நிலைக் குழுவிற்கும் தலைமை பொறுப்பை வகிக்கின்றனர். திரிணமுல் காங்கிரசின் திரு தோலா சென் வர்த்தகதுறை நிலைக்குழுவிற்கு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

*ஆயுஷ் துறை*

உலகளாவிய சுகாதார அமைப்பில் மக்களின் நலனுக்காக ஆயுஷ் அமைப்புகளின் ஒருங்கிணைப்பை மேம்படுத்த ஆயுஷ் அமைச்சகம் உறுதி பூண்டுள்ளதாக ஆயுஷ் துறை அமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் கூறி உள்ளார். புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய திரு ஜாதவ் கடந்த 100 நாட்களில் தமது அமைச்சகத்தின் சாதனைகள் குறித்து விளக்கமளித்தார். ஆயுஷ் அமைப்புகளின் ஒருங்கிணைப்பை மேம்படுத்த உலக சுகாதார அமைப்புடன் ஆயுஷ் அமைச்சகம் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளதாக அவர் கூறினார். பாரம்பரிய மருத்துவ நடைமுறைகளை மேம்படுத்த வியட்நாம், மலேசியா, ஆகிய நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திட பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். மேலும் இந்திய மருத்துவம், ஓமியோபதிக்கான மருந்தக ஆணையம் மற்றும் இந்திய மருந்தியல் ஆணையம் ஆகியவை இணைந்து வரலாற்று சிறப்பு மிக்க புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்டுள்ளதாகவும் மத்திய அமைச்சர் கூறினார். முதியவர்களின் சுகாதார தேவைகளை பூர்த்தி செய்வதற்காக நாடு முழுவதும் 14 ஆயிரத்து 692 ஆயுஷ் முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

*புதுச்சேரி-சுற்றுலா*

புதுச்சேரி சுற்றுலா துறை சார்பில் உலக சுற்றுலா தின விழாவை புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் மற்றும் முதலமைச்சர் திரு ரங்கசாமி

ஆகியோர் துவக்கி வைத்தனர். புதுச்சேரியின் பழைய துறைமுக வளாகத்தில் நடைபெற்ற இந்த விழாவில் துணை நிலை ஆளுநர் ஆன்மிக சுற்றுலா அதிகரிப்பதால் சித்தர்கள் வாழ்ந்து ஜீவசமாதி அடைந்த இடங்கள் குறித்து குறிப்பு கையேட்டை துணை நிலை ஆளுநர் மற்றும் முதலமைச்சர் ஆகியோர் வெளியிட்டனர். விழாவில் உரையாற்றிய முதலமைச்சர் திரு ரங்கசாமி புதுச்சேரியில் சுற்றுலா துறை மிக பெரிய அளவில் வளர்ச்சி அடைந்து வருவதாகவும், வாரத்தில் 3 நாட்கள் சுற்றுலா பயணிகள் வருகையால் அனைத்து பகுதிகளிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். மேலும் புதுச்சேரி ஒரு ஆன்மிக பூமி அரவிந்தர் மட்டுமல்லாமல் எத்தனையோ சித்தர்கள் இங்கு ஜீவசமாதி அடைந்துள்ளது சிறப்பு அம்சமாகும் என்றும் அவர் கூறினார்.

நகரில் பொழுதுபோக்கு, ஆன்மிகம், அழகிய கடற்கரை மற்றும் அனைத்து வசதிகளையும் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் முதலமைச்சர் கூறினார். சுற்றுலாப் பயணிகளின் வருகையால் கலாச்சார பரிமாற்றம் மற்றும் நட்புறவு ஏற்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் புதுச்சேரியில் டெங்கு போன்ற காய்ச்சல் நோய்களை கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அனைத்து மருத்துவமனைகளிலும் தேவையான மருந்துகள் மற்றும் சிகிச்சைகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் புதுச்சேரியில் தீபாவளி பண்டிகைக்கு முன்பாக ரேஷன்கடைகள் திறக்கப்படும் என்றும் முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்துள்ளார். நிகழ்ச்சியில் சுற்றுலாத் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், சபாநாயகர் திரு செல்வம், சட்டமன்ற உறுப்பினர் திரு அனிபால் கென்னடி. தலைமைச் செயலர் திரு சரத் சவ்கான், சுற்றுலாத் துறைச் செயலர் திரு ஜெயந்த

குமார், சுற்றுலாத் துறை இயக்குநர் திரு முரளிதரன், அதிகாரிகள் மற்றும் கல்லூரி மாணவ-மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

குரங்கம்மை

கேரளா மாநிலத்தில் மேலும் 38 வயது உள்ள ஒருவருக்கு குரங்கம்மை பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது. வெளிநாட்டில் இருந்து கொச்சி திரும்பிய அந்த நபர் எம்-பாக்ஸ் வைரஸ் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதற்கிடையில், அம்மாநில சுகாதாரத் துறை அமைச்சர் வீணா ஜார்ஜ் திருவனந்தபுரத்தில் உயர்நிலை ஆய்வுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார். பாதிக்கப்பட்ட நபரின் தொடர்பு பட்டியலை சுகாதாரத் துறை தயாரித்து தடுப்பு நடவடிக்கைகளை அதிகரித்துள்ளது. நோய்க்கான அறிகுறி உள்ளவர்கள் மற்றவர்களுக்கு வைரஸ் பரவாமல் பாதுகாப்பாக இருக்குமாறு அம்மாநில சுகாதாரத்துறை அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார். மேலும் மாநிலத்தின் 14 மாவட்டங்களிலும் தனிமைப் படுத்துதல் வசதிகளை அரசு அமைத்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வானிலை

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு மற்றும் வளிமண்டல சுழற்சி காரணமாக தமிழகத்தின் 19 மாவட்டங்களின் ஒரு சில இடங்களில் நாளை இடி மின்னலுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இன்று இடி-மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

சுற்றுலா மனிதகுலத்தின் பிணைப்பை உருவாக்குகிறது என்றும் பொருளாதாரத்தை உயர்த்துவதில் பங்காற்றுகிறது என்றும் குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் கூறி உள்ளார்.

ஜம்மு-காஷ்மீரில் வரும் 1-ஆம் தேதி நடைபெற உள்ள 3-ஆவது மற்றும் இறுதி கட்ட சட்டப் பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி பங்கேற்கும், 114 ஆவது மன் கீ பாத் என்னும் மனதின் குரல் நிகழ்ச்சி வரும் 29 ஆம் தேதி, காலை 11 மணிக்கு, அகில இந்திய வானொலியின் அனைத்து அலைவரிசைகளிலும் ஒலிபரப்பாக உள்ளது.

புதுச்சேரியில் சுற்றுலாப் பயணிகளின் வருகையால் கலாச்சார பரிமாற்றம் மற்றும் நட்புறவு ஏற்படுகிறது என்று முதலமைச்சர் திரு ரங்கசாமி குறிப்பிட்டுள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/27.9.2024/Script/

--------------------------------